செ.வெ.எண்-36 நாள்-13.10.2021

# பத்திரிக்கைச் செய்தி.

அரியலூர் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்புக்குழு கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.**பெ.ரமண சரஸ்வதி,** இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (13.10.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முந்தைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் செயல்பாடுகள் குறித்தும் விளக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவித்த கொரோனா பெருந்தொற்றினால் ஒற்றை பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு ரூ.300000/- மற்றும் இரட்டை பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு ரூ.500000/- மற்றும் மாதந்தோறும் பராமரிப்பு நிதி ரூ.3000/- பெறுவது தொடர்பாக கூராய்வு செய்யப்பட்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஊரக பகுதியில் குழந்தை திருமணம் குழந்தைகளுக்கெதிரான பாலியல் குற்றங்கள், குழந்தை தொழிலாளர், காணாமல் போன குழந்தைகள் பெண் கல்வி மேம்பாடு குறித்து விழிப்புணர்வு வழங்க வேண்டும் எனவும், பாலியல் குற்றங்களினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு அரசு நிவாரண உதவித்தொகை பெற்று வழங்க வேண்டும் எனவும், குழந்தை திருமணத்தை தடுக்கும் வகையில் கூடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமெனவும், தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெறும் இடங்களில் சென்று விழிப்புணர்வு வழங்க வேண்டும் எனவும், மேலும் நகராட்சி அளவில், வட்டார அளவில், பேரூராட்சி அளவில் மற்றும் கிராம அளவிலும் உள்ள குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கூட்டம் காலாண்டிற்கு ஒரு முறை நடத்தப்பட்டு, குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பாக அந்தந்த பகுதியில் உள்ள பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். மேலும் அப்பகுதிகளில் குழந்தைகளுக்கெதிரான பிரச்சனைகள் இருப்பின் உடனடியாக களையப்பட தொடர்புடைய துறைகளோடு இணைந்து செயல்பட வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.**பெ.ரமண சரஸ்வதி,** இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

மேலும் வறுமையான சூழ்நிலையில் உள்ள மாணவிக்கு சீருடை மற்றும் கல்வி உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் அரியலூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணை குழு சார்பு நீதிபதி திரு.N.அழகேசன் அவர்கள், குற்றவியல் நீதித்துறை நடுவர்/தலைவர் இளைஞர் நீதிக்குழுமம் திரு.P.சந்திரசேகர் அவர்கள், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. விஜயகுமார் அவர்கள், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி. சாந்தி அவர்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.ச.துரைமுருகன் அவர்கள், குழந்தைகள் நலக்குழு தலைவர் வ. துரைராசன் மற்றும் உறுப்பினர்கள், இளைஞர் நீதிக்குழும உறுப்பினர்கள், நன்னடத்தை அலுவலர் திரு.புஷ்பராஜா, சுகாதாரத்துறை, சைல்டு லைன் 1098 மற்றும் உள்ளிட்ட அனைத்துத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**